

அமரர்

# மகேஸ்வரி நவரத்தினம்

(யோகம்மா ரீச்சர்) அவர்களின்

இறைபதப்பேறு குறித்த



# நினைவு மலர்

04-07-2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# திருமதி மகேஸ்வரி நவரத்தினம்

(யோகம்மா ரீச்சர்)

அவர்களின் இறைபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

04.07.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



அன்பினில் சிகரமாய்

பண்பினில் கோபுரமாய்

பாசத்தின் உறைவிடமாய்

மனிதருள் மாணிக்கமாய்

அனைவருடனும் பாசத்துடனும்

நேசத்துடனும் பழகி இறக்கும் வரை

ஒளிச் சுடராய் பிரகாசித்து

இன்று எம்மவர் உள்ளங்களில்

குடும்பத் தலைவியாக இருந்து எமைக்காத்து

வளர்த்து உயர்வளித்து இறைவனடி சேர்ந்த

**அமரர் திருமதி மகேஸ்வரி நவரத்தினம்** அவர்களின்

நினைவுகளுடன் உன் மலர்ப்பாதங்களில் இந் நினைவேட்டினைக்

காணிக்கையாக்குகின்றோம்.

இங்ஙனம்

– குடும்பத்தினர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண் மகிழ

16-07-1934

விண் தழுவ

04-06-2022

அமரர்

# திருமதி மகேஸ்வரி நவரத்தினம்

(யோகம்மா ரீச்சர்)

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு சுபகிருது அமைந்த நல்வைகாசியில்
பூண்ட பூர்வபக்க பஞ்சமி நற்திதியில் - நீண்ட புகழ்
நவரத்தினம் மகேஸ்வரி நற்கதி அடைந்தமை
தவவினைப் பயனென்று சாற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னார் இளமையில் கணவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தசஷ்டி கவசம்



## காப்பு

### நேரிசை வெண்பா

**துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்**
**பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்**
**நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்**
**சஷ்டி கவசந்தனை.**

### குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த குமரன்
அடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர்குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன் மணிபூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதரெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் ரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்க ருளுவர்
மாற்றவ ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரை பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லிமாலை



வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்து
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகலகலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலுங் வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகலகலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபுராணம்



திருச்சிற்றம்பலம்

**தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீங்கி**

**அல்ல லறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை**

**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**

**திருவாசகம் என்னுந் தேன்.**

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!

இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க

கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!

ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க

ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தனடிவெல்க!

பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!

புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!

கரங்குவிவார் உண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!

சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி

தேசன் அடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி

மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரார் பெருந்துறை நம்தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கெட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்தெல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப்பூடு ஆகி புழு வாய் மரமாகி
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்தி ளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய் தணியாய் இயமான நாம் விமலா
பொய் யாயின எல்லாம் போய கல வந்து அருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே!
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே!
கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றாற் கட்டிப்
புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந் துள்ளுருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்!
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே தேனாரமுதே சிவபுரனே!
பாசமாம் பற்று அறுத்து பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார்தங்கருத்தின்
நோக்கு அரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண் பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உன்னார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் வாழ்க்கைப் பயணத்திலே......

சீருடன் சிறப்பும்சேரும் திருநிறை இலங்காபுரியில்
பேருடன் பெருமைசேரும் பெருநகர் யாழ்ப்பாணத்தின்
ஊரென வடபாலிலங்கும் ஒப்பிலா கொக்கூர்ப்பதியில்
சேரும் பிரம்படிதனில் சிறப்புடன் வாழ்ந்துவந்த
வணிகராம் விநாயகமூர்த்தி தன்வனிதையாம் பொன்னம்மாவுடன்
அணிசெய்து வாழ்வாங்குவாழ்ந்த அருந்தவப் பேறின்பயனாய்
வருடம் முப்பத்துநான்கில் வந்த ஆடிப்பிறப்பில்
திருமகள் அன்னசேயாய் உதித்ததம் மகவுக்கு
மகேஸ்வரி எனும்நாமமிட்டு வளர்த்தனர் அவ்வேளை
தந்தையின் தொழில்சிறந்து தனமும் பெருகியதால்
முந்தி எல்லோரும் "யோகம்மா" என அழைக்க,
வளர்ந்தனள் செல்வி தன்னை வளமாக்கும் கல்விதேடி
கொக்குவில் இந்து ஏகி கற்றபின் உயர்கல்விக்காய்
இராமநாதன் கல்லூரி சென்று யாவையும் கற்றுத்தேர்ந்து
தமிழுடன் ஆங்கிலமும் தகைசால் சமஸ்கிருதமுமென
மும்மொழிப் புலமை பெற்று விளங்கிய தோடல்லாமல்
சரஸ்வதி பாக்கியராசாவிடம் சங்கீதம் முறையில்பெற்று
சங்கீதசபையின் தேர்வுகள் தேர்ந்தனள், அதன்பின்
மண்டைதீவு ஊரின் வட்டாரம் இரண்டைச்சேர்ந்த
தண்டமிழ் ஆசிரியன் நவரத்தினம் என்பானை
திருமணம்செய்து அவ்வாழ்க்கையின் பேறாய்பெற்ற
பிள்ளைகள் நான்கையும் பேணி வளர்த்து
கல்வி புகட்டி கலைபல அறியச்செய்து
நல்வழி காட்டி நற்தொழிலில் அமர்த்தி மகிழ்ந்தாள்.
அன்னாள்,
இடையினில் சிறிதுகாலம் அரச எழுதுனராக
கடமையும் ஆற்றிப்பின் அத்தொழில் கைவிட்டு
அயலவர் பிள்ளைகட்கு ஆங்கிலம் போதித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் சிறுமியர்க்கு ஆரம்ப கல்வியூட்டி
தனியார் கல்வியில் தலை சிறந்திருந்தனள்.
ஆயிர மாயிரமாய் அம்மையின் மாணாக்கர்
காசினி எங்கும் கல்விப்பயன் விளைத்து – இவர்
ஆசியுடன் வாழ்வின் உயர்நிலை அடைந்துளார்.
மேலும்,
பெண்கள் மேல்நிலைநாடி, சமூகசேவை தேடி
தமிழ்மகளிர் பேரவையின் கொக்கூர் கிளையின்
செயலாளராகிச் சேவைபலவும் சிறப்புடன் புரிந்து
காரியமாற்றி களித்திருந்த தோடல்லாமல்,
ஆன்மீக நாட்டம்கொண்டு சாயிநாதன் பாதம்நாடி
யாழ்மத்திய சத்யசாயி சேவாநிலையம் சேர்ந்து
பஜனை பலபாடி பாடல்கள் புனைந்து
சிறார்க்கு ஒழுக்க விழுமியம் ஊட்டும்
"பாலவிகாஸ்" குருவாக பற்பல வருடகாலம்
சேவையாற்றி சிறந்திருந்தனள்.
மொழியாற்றல், இசை, நடனமொடு நாடகமும்
கவிபுனைதல், கைவினைப் பொருள்செய்தல்
எனப் பலதுறை விற்பன்னரான அன்னார்
தன் மாணாக்கருக்கும் அக்கலைகள்
ஊட்டி மகிழ்ந்தனள்.
ஈற்றில்,
சிறிதுகாலம் நோய் வாய்ப்பட்டு நினைவு தப்பியபோதும்
அறிவுடன் பஜனை பாடிவந்த அம்மையார்
சுபகிருது வருடம் வைகாசி மாதம்
பூர்வபக்க பஞ்சமி திதியில்
பிள்ளைகள், சோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள் அழுதிருக்க ஆண்டவன் அடிகள் சேர்ந்தனள்.

ஓம்...சாந்தி... சாந்தி ... சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியத்துவத்தின் மிகப்பெரிய ஆளுமை

## **திருமதி மகேஸ்வரி நவரத்தினம்** அவர்கள்

மாதா, பிதா, குரு, தெய்வம் என்கின்ற உயர் பரிமாணங்களின் சொந்தக்காரராக வாழ்வாங்கு வாழ்ந்து, தமிழ் வையமெல்லாம் எழுச்சிபெற அயராது சேவை செய்த உத்தமராக வாழ்ந்தவர் எங்கள் யோகம்மா ரீச்சர் அவர்கள். மிகப்பெரும் அறிவின் ஊற்றாகவும், குழந்தைகளின் மனஎழுச்சி ஆற்றல்களை கிளர்ந்தெழ வைத்து ஆளுமை மிக்க அற்புதமான மாணவர் பரம்பரையை எழுச்சிபெறவைத்த வித்தாகவும், தமிழ் பேசும் நல்லுலகத்தின் மிகப்பெரிய சொத்தாகவும், நாடிவரும் நண்பர்களை, உறவுகளை, அயலவரை, அன்பு செய்யும் அழகிய மனிதராகவும் வாழ்ந்து மகிழ்ந்தவர் அன்னை யோகம்மா அவர்கள்.

பகவான் ஸ்ரீ சத்யசாயி அவர்களிடத்திலே தூயபக்தி கொண்டவர் அன்னை. பகவான் காட்டிய பாதையில் தன் வாழ்க்கைப்பயணத்தை தொடர்ந்தவர். பலநூறு மாணவர்களை பகவானின் "பாலவிகாஸ்" வகுப்பிலே புடம்போட்டு, ஒளிபெற வைத்து, அவர்களை ஒழுக்க சீலர்களாகவும், அறிவாளர்களாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும், உருவாக்கிய தூயவர்.

அன்னையின் அரவணைப்பிலும் அன்புநெறியிலும் எனது இரண்டு குழந்தைகளும் புடம்போடப்பட்டு அன்னையின் அளப்பரிய பணியின் அடையாளங்களாக விளங்குகின்றனர். இறைவன் காலத்துக்குக்

காலம் இத்தகைய அற்புத மனிதர்களை இப்புவிக்கு அனுப்புகின்றான். அவர்களால் இப்புவியிலுள்ளோர் இன்புறுகின்றனர்.

இந்த வகையிலே தன்னை நாடியவர்களையெல்லாம் இன்புறவைத்து, தான் பெற்ற பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பெருமை நிலை பெறவைத்து, தனது சொந்தபந்தங்களை எல்லாம் சிறப்புறச்செய்து நிறைவான வாழ்வோடு இவ்வுலக வாழ்வை நிறைவுசெய்து பகவான் ஸ்ரீ சத்யசாயியின் பாதக் கமலங்களில் நித்தியவாழ்வு பெற்ற அன்னையின் ஆத்மா சாந்திபெற இறையருளை வேண்டி அமைகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**திரு. சி. இளங்கோ.**
**அதிபர்,**
**யா / மண்டைதீவு மகா வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடிப் பறந்த குயில்

"பக்த பிருந்த வந்திதா சாயி மகேசா
ஜெயஹே ஜெயஹே ஜெயது சாயி மகேசா"

இனிமையான இராகத்தில், தேனிலும் இனிமையான குரலில் பாடும் அந்தப் பாடலைக் கேட்டு கண்களில் அருவியாக நீர் பொழிய பக்தி மயக்கத்தில் எம்மை மயங்க வைத்த அந்தக் குரல் இன்று ஓய்ந்து விட்டது. மகேஸ் அன்ரி என எல்லோராலும் அழைக்கப்படும் அந்தப் பக்தையின் பூதவுடல் தான் இல்லையே தவிர, அவரது நெஞ்சை உருக்கும் பஜனைப் பாடல்கள் இன்றும் எம் காதில் ஒலித்த வண்ணமே இருக்கின்றன. நான் சுவாமியின் பால் என்னை இணைத்துக் கொள்வதற்குக் காரணமே, அந்த மயக்கும் குரலில் பாடப்படும் பஜனைப் பாடல்களே என்பதில் சந்தேகமில்லை.

திருமதி சரஸ்வதி பாக்கியராஜாவைத் தன் குருவாகப் போற்றி அவர் வழியில் தன்னையும் உருவாக்கிய மகேஸ் அன்ரி எப்போதும் தன் குருவை எமக்கு உதாரணமாகக் காட்டுவார். மகேஸ் அன்ரியின் பாடல்களை அவர் பாடும்போது ஒலிப்பதிவு செய்ய வேண்டும் என்று அடிக்கடி நினைப்பதுண்டு. ஆனால் அதை செயற்படுத்த முயற்சி செய்யவில்லை. இது என் மனதை மிகவும் வருத்தியது. ஆனால் எதிர்பாராத விதமாக அவரது உயிர் பிரிந்த பின்னர் எனக்கு மிகவும் பிடித்த "பக்த பிருந்த வந்திதா" என்ற பாடல் பதிவு செய்த ஒலிப்பதிவை அவரது மகள் மூலம் எனக்குக் கிடைத்த போது, நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இது சுவாமியின் ஒரு அற்புதமேயாகும். 37 வருடங்களுக்கு முன் ரசிக ரஞ்சன சபாவில் சாயி

நிலையம் இயங்கிய காலத்தில் பாடப்பட்ட அப்பாடல், எப்படிப் பதிவாகி, இன்று எமக்குக் கிடைத்தது என்பதில் சுவாமியின் கருணையே அன்றி வேறென்ன?

சிவராத்திரி, அகண்ட நாம பஜனை போன்ற நிகழ்வுகளில் சளைக்காமல் தொடர்ச்சியாகப் பாடுவதில் அவருக்கு நிகர் யாருமில்லை. அப்படியான ஒரு நிகழ்வில் தான் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பிய பின் அவருக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தை அவர் எம்முடன் பகிர்ந்து கொண்டார். தான் களைத்துப்போய் வீட்டுக்குச் சென்று உணவு சமைத்து குடும்பத்தினருக்குக் கொடுத்துவிட்டுப் படுத்திருந்ததாகவும், தனக்குக் காய்ச்சல் அதிகமாகி கண்களை மூடி உறங்க முயற்சித்த போது, திடீரெனத் தனக்கருகில் ஒருவர் இருந்து விசிறிக் கொண்டிருந்ததாகவும், தான் கண் விழித்துப் பார்த்தபோது, எவரும் இல்லை எனவும், ஆனால் உடல் முழுக்க வியர்த்து காய்ச்சல் விட்டுவிட்டதாகவும் தன் அனுபவத்தைக் கூறினார். அங்கு சுவாமியே பிரசன்னமாகி தன் புகழைப் பாடிக் களைத்த பக்தையின் காய்ச்சலைக் குணமாக்கினார் என்பதில் சந்தேகமில்லை. குழலூதும் கண்ணனையே பாடிப்பாடி அவருடன் சங்கமமாகிய அந்த மீரா போல், சுவாமியின் புகழைப் பாடிப்பாடியே தன் வாழ்க்கையை அர்ப்பணித்த அந்தக் குயில் இன்று இவ்வுலகை விட்டுப் பறந்துபோய் சுவாமியின் காலடியில் சரணடைந்துவிட்டது.

யாழ் மத்தி பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தின் செயற்பாடுகளிலும் அதன் வளர்ச்சியிலும் மிகவும் அக்கறைகொண்டு செயற்பட்டவர். திருமதி பாக்கியராஜா வெளிநாடு சென்ற வேளையில் சாயி சமித்தியின் பஜனைப் பொறுப்பை மகேஸ் அன்ரியிடம் ஒப்படைத்துச் சென்றார். தன்னிடம் ஒப்படைத்த பொறுப்பைக் கடைசி வரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளராமல் நிறைவேற்றினார். எனது கணவர் ஓர் சாயி அடியவராக இருந்த பொழுதும் சமித்தியின் நிர்வாக செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. எனது கணவரை சமித்தியின் நிர்வாகப் பொறுப்பில் ஈடுபடச்செய்து 2006ஆம் ஆண்டு யாழ் மத்திய சமித்தியின் தலைமைப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். "பாலவிகாஸ்" வகுப்புக்களைக் கொக்குவிலில் தன் இல்லத்தில் நடாத்தி அத்தனை குழந்தைகளையும் அலங்கரித்து சுவாமியின் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நிலையத்துக்கு அழைத்து வருவார். இவர் மிகவும் அன்பானவரும் அதே சமயம் நிலைய விடயங்களில் மிகவும் கண்டிப்பானவரும் ஆவார். சுவாமியின் அவதார நிகழ்வுகளில் எமது நிலைய மூத்த உறுப்பினராகவிருந்து அவர் சுவாமியின் பிறந்தநாள் கேக் வெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைக்கும்போது நாம் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சியடைவோம். அவர் சுவாமியின் நேரடித் தரிசனம் கிடைக்கவில்லையே என்ற கவலை அவரிடம் காணப்பட்டது. சுவாமி அந்தக் கவலையையும் நீக்கி மிகக் கஷ்டமான காலப்பகுதியில் 2010ஆம் ஆண்டு சுவாமி அவரைப் பிரசாந்தி நிலையத்துக்கு அழைத்து தன் தரிசனத்தையும் கிடைக்கச் செய்தார். நிச்சயமாக அந்த அன்பான பக்தையை சுவாமி தன் பாதார விந்தங்களில் சேர்த்திருப்பார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஜெய் சாய்ராம்

**திருமதி பா. கனகரத்தினம்**

**யாழ் மத்திய சத்ய சாயி சேவா நிலையம்**

# நெஞ்சம் மறக்கவில்லை...

அக்கா! உன்னுடன் நான் சேர்ந்து வாழ்ந்தது இருபது வருடங்கள்தான். அதனால் எங்களுடைய பாடசாலை வாழ்க்கைதான் என் நினைவில் கூடுதலாய் இருக்கின்றது. நீ ஆங்கிலத்தில் கெட்டிக்காரி. எத்தனையோ பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பித்தாய். அதில் நானும் ஒருத்தி. நான் லீவில் வரும்பொழுது இருவரும் ஒவ்வொருவருடைய கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்வோம். அதனால் எங்களுடைய மனம் ஆறுதல் அடையும்.

உன்னுடைய இனியகுரல் பாடல்கள் என்காதில் என்றும் ஒலித்துக்கொண்டேயிருக்கும். "ராசம்" என்று என்னை அழைக்கும் நீ கடைசியாகக் கதைத்தபொழுது "சறோஜினி" என்று அழைத்தாய். அது ஏனோ எனக்கு விளங்கவில்லை. எத்தனையோ மைல்களுக்கு அப்பால் இருந்துகொண்டு உன்னைப் பார்க்க முடியாமல் கண்ணீர் விடத்தான் என்னால் முடிந்தது.

உன் ஆத்மா சாந்தியடைய பாபா அருள் வேண்டுகிறேன்.

**உன் அன்புத்தங்கை**
**ராசம் ( சறோஜினி )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரீச்சர் – என் நினைவுகளில்

பெரும் சோகம் தருகின்ற ரீச்சரின் மறைவு நாற்பது வருடங்களுக்கு முந்தைய என் சிறுவயது நினைவுகளை கிளர்ந்தெழச் செய்கின்றன. ஆறாம் வகுப்பிலிருந்து அவரிடம் ஆங்கிலம் கற்றபோது கிடைத்த அனுபவங்களை அசைபோடுவது அற்புதமானது, அலாதியான மகிழ்வைத்தரக்கூடியது.

சிறுவயது குறும்புகளுடன் நான் வகுப்பின் அமைதியை அடிக்கடி குலைத்தாலும் அவர் ஒருபோதும் அதிர்ந்து பேசியதில்லை. மாணவர்களின் வெகுளித்தனமான பேச்சுக்களை அதட்டி, அவர்களின் சுட்டிக்குரல்களை அவர் நிறுத்துவதில்லை. மாறாக அமைதியாக செவிமடுத்து, முடிவில் தனது கருத்தை அன்பாகச் சொல்லிப்போகும் அதிசயமான ஓர் ஆசிரியையாக அவர் இருந்தார்.

பாடசாலையில் நிகழ்ந்த ஒரு ஆங்கிலப்பேச்சுப்போட்டிக்காக, 'A visit to an exhibition' எனும் கட்டுரையை எழுதி எனக்குப் பேசப்பழக்கினார். பாடசாலையில் பெரும் வரவேற்புப் பெற்ற அந்தப்பேச்சே எனது முதலாவது ஆங்கிலப் பேச்சாக அமைந்தது.

சத்யசாயி பாபாவின் மீது மிகுந்த அன்புகொண்ட ரீச்சர், புகழ்மிக்க சங்கீத ஆசிரியையான திருமதி. சரஸ்வதி பாக்கியராஜா அவர்களின் வீட்டில் நடைபெற்ற "பாலவிகாஸ்" வகுப்புகளுக்குப் பொறுப்பாக இருந்தார். அந்த வகுப்பிற்கு என்னையும் கூட்டிச்சென்றார். ஒரு கலை நிகழ்ச்சிக்காக 'இரணியன்' என்னும் நாடகத்தை அவரே எழுதி இயக்கினார். மிகுந்த கூச்ச சுபாவம் கொண்டிருந்த என்னை மிகவும் உற்சாகப்படுத்தி அந்த நாடகத்தில் இரணியனாக நடிக்க வைத்தார்.

பெருமாள் கோவிலுக்கு முன்பாக இருந்த 'ரசிக ரஞ்சன சபா' வில் அந்த நாடகம் மேடையேறிய போது எங்களுக்கான ஒப்பனையையும் அவரே செய்தார். நாடக அரங்கில் முன்வரிசையில் அமர்ந்திருந்த என் பள்ளித்தோழனால் கூட என்னை அடையாளம் காணமுடியாத அளவுக்கு அவரது ஒப்பனை தத்ரூபமாக இருந்தது. வாழ்வில் மறக்கமுடியாத அந்த நாடகம்தான் எனது முதலாவது மேடையேற்றம்.

தன்னிடம் பயிலும் அத்தனை மாணவமாணவிகளின் திறமைகளை சிறுகச்சிறுக செதுக்கி உருவாக்கிய அந்த அன்பான ஆசிரியையை, பாடசாலைக்காலங்களின்பின் சந்திக்க எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பனித்தேசமொன்றில் தொடர்ந்த என் வாழ்வுப்பயணத்தில், நிலாக் காயும் இரவுகளில் துளிர்த்தெழும் பழைய நினைவுகளில் அடிக்கடி அவரும் வந்து போவார்.

என்னைப்போலவே, தொலைதூரங்களில், உலகப்பந்து எங்கும் பரந்திருக்கும் ரீச்சரின் மாணவமாணவிகள் அனைவரும் அவரின் மறைவையறிந்து, பெரிதும் துயருறுவர். தங்கள் சிறுவயதுப் பராயங்களில் தங்களை வழிநடாத்திய, தாயை ஒத்த ரீச்சருடனான அற்புத நினைவுகளில் மூழ்கி கண்ணீருடன் கவலையுறுவர். எங்களின் நினைவுகளில் ரீச்சர் எப்போதும் உயிரோடிருப்பார், தன்னுடைய மெல்லிய புன்னகையோடு.

**நீங்காத நினைவுகளோடு,**

**நாகராஜா நிமால்கரன், கனடா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்பத்து மூன்றாவது அகவை வாழ்த்து

16.07.2017

**இனிய பிறந்தநாள் வாழ்த்துகள் ரீச்சர்!**

நான் பார்த்து வியந்த ஆளுமைகளில் ஒருவர் எங்கள் ரீச்சர். எவ்வித பெரிய கனவுகளோ, வழிகாட்டல்களோ இல்லாத சராசரி குடும்பப் பின்னணியில் பிறந்த எங்களுக்கு பாடம் சொல்லிக்கொடுத்து, ஒழுக்கம் சொல்லிக்கொடுத்து, நல்வழிப்படுத்திய நல்ல உள்ளம் எங்கள் ரீச்சர்.

பெரும்பாலும் மத்தியதரக் குடும்பத்தினரே எங்கள் பகுதியில் வசித்தனர். முதல் தலைமுறை பட்டதாரிகளைக் கொண்டிராத சமூகங்கள். பாடசாலைக்கு அன்றாடம் பிள்ளைகளை அனுப்ப மட்டுமே முடிந்த, பல இயலாமைகளைத் தன்னகத்தே கொண்டிருந்த ஓர் சராசரி வாழ்க்கை முறை வாழ்ந்த குடும்பங்கள். இத்தகைய குடும்பப் பின்னணியில் பிறந்த எங்களுக்கு பெரியதொரு வழிகாட்டியாய் ரீச்சர் எங்கள்ஊரில் இருந்தார். ஆண்டு மூன்றில் ஆரம்பமான எங்கள் பயணம் ஆண்டு பத்து வரை தொடர்ந்தது. 'இனி வேலாயுதம் மாஸ்ரரின்ரை மணிக்கு போங்கோடா' என ரீச்சரே கலைச்ச பிறகுதான் தனியார் கல்வி நிலையங்களுக்கு முதல் தடவையாய் காலடி எடுத்து வைத்தோம். நானும் சங்கரும்.

தன்னை நம்பி வரும் பிள்ளைகளைத் தன் பிள்ளைகள் போல் உரிமை எடுத்துக்கொள்வார். தன்னால் முடிந்ததை எங்களுக்குக் கற்றுத் தருவதோடு, மேலதிக வகுப்புகள் தேவையெனில் அவரே ஒழுங்குபடுத்தியும் தருவார். ஐந்தாம் வகுப்பில் நடக்கும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு விசேட கோச்சிங் கிளாஸ் எல்லாம் போகவேணும் என்கிற விடயம் எல்லாம் எங்களுக்குப் பெரிதாகத் தெரியாத காலத்தில் ரீச்சரே கூட்டிக்கொண்டுபோய் அடுத்த தெருவில் இருந்த

இராசரத்தினம் ரீச்சரிட்டை சேர்த்து விட்டார். அதுவும் பத்தாதெண்டு கிழமைக்கொருக்கா இராசரத்தினம் ரீச்சரிட்டை வந்து புரோகிரஸ் அப்டேட் எடுத்து எங்களைக் கவனித்தும் கொள்வார்.

ஐந்தாம் வகுப்பில் தான் இப்படி என்றால் ஒன்பதாம் வகுப்பில் பொன்னுச்சாமி சேரிட்டை தமிழும் சமயமும் படிக்க அனுப்பியது அடுத்த கட்டம் எல்லோருக்கும் ரீச்சர் என்றால் ஒரு பயம் கலந்த மரியாதை. ரீச்சரின் கண்டிப்பு ஊரறிந்த ஒன்றுஆனாலும் அதுவும் எங்கள் மீது கொண்ட மிதமிஞ்சிய அக்கறையே. ரீச்சரிட்டை பயத்திலை படிக்காமல் ஓடினவர்களும் உண்டு.

ஆங்கிலம் ரீச்சருக்கு கைவந்த கலை. விடிய ஆறு மணிக்கு ரீச்சரின்டை ஆங்கில வகுப்பு. ரவியும் ஆனும் விடுமுறை போனகதையை ரீச்சர் மொழிபெயர்ப்பு செய்து சொல்லுவா எண்டு கோயில் பிரசங்கத்துக்குபோகும் பக்தர்கள் போலப்போனால் சப்மன் இங்கிலிஷ் கிறமர் புத்தகத்தை அக்குவேறு ஆணிவேறா பிரிச்சு மேஞ்சு விடுவா. இந்த புத்தகங்கள் எல்லாம் இந்த மனுசிக்கு எப்பிடித்தான் கிடைக்கிறதோ என வியந்ததுண்டு. அந்தக்காலத்தில் ஓ. எல்லில் ஆங்கிலத்தில் எங்களை " டி " எடுக்கப்பண்ணினது ஒரு இமாலய சாதனை.

இவ்வளவுக்கும் ரீச்சர் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரோ அல்லது ஆசிரியத்தொழில் செய்தவரோ அல்ல. அவரது ஆளுமையும் தனது சமூகத்தின் மீது அவர் கொண்ட அக்கறையுமே அவரை ஆசிரியர் ஆக்கியது என்பதே உண்மை. எங்கள் ஊரில் பெரும்பாலும் எண்பதுகளின் ஆரம்பத்தில் தொடங்கி தொண்ணூறுகளின் இறுதிவரை கற்ற அனைவரும் ரீச்சரிடம் கல்வி பயின்றவர்களாகவே இருப்பார்கள். எல்லோர் பிள்ளைகளும் ஆரம்பக்கல்வி பயின்ற இடமாக இருக்கிறது எங்கள் ரீச்சர் வீடு. பல ஆசிரியர்கள் இப்போது பிரம்படியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைச் சூழ உள்ள பகுதிகளிலும் வசித்தாலும் ரீச்சர் என்கிற அந்த ஒற்றைச்சொல்லுக்கு எப்போதும் சொந்தக்காரி எங்கள் யோகம்மா ரீச்சர் அல்லது மகேஸ்வரி ரீச்சர். இப்போதும் எங்கள் வீட்டை அடையாளப்படுத்த பிரம்படி ஒழுங்கையில் ரீச்சர் வீட்டுக்குப் பக்கத்திலை என்னும் அடையாளமே நிலைத்திருக்கிறது. அந்த அளவுக்கு அவர் அடையாளத்தை மாற்ற இன்னொரு சமூக அக்கறை கொண்ட அடையாளம் உருவாகவில்லை என்பதே உண்மை.

எல்லோருக்கும் நல்ல வழிகாட்டிகள் அமைந்து விடுவதில்லை. ஆனால் எங்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாய் எங்கள் ரீச்சர் அமைந்தார்.

இப்போது வகுப்புக்கள் எடுக்கமுடியாத வயதில் ரீச்சர் இருந்தாலும் அயல் வீட்டில் வதியும் எங்கள் அம்மா பேரக்குழந்தைகளைக் கூட்டிச்சென்று ரீச்சரிட்டை கொஞ்ச நேரமாவது படிக்க விட்டுவருவதை அறிந்து அம்மாவிடம் நான் கடிந்து கொண்டபோது 'ரீச்சரிட்டை ஒருநாள் படிச்சாலும் அவங்கள் நல்லா வருவாங்கள்' என்றார். சமூகத்தில் இருக்கும் இந்த நம்பிக்கை ஒன்றே உங்களை நலமாக வாழ வைக்கும். எண்பத்து மூன்றாம் அகவை காணும் இந்த நாளில் நலமாய் வாழ இறைவனை வேண்டுகிறோம்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் ரீச்சர்.

**உங்கள் மாணவன்.**

**இராசரத்தினம் தவக்குமார். ( பாலன் ),**

**அவுஸ்திரேலியா.**

# Our Teacher

Like a rare gem
Found in the depths of the earth
You are one of those jewels
Of whom there is a dearth.

Like a prized possession
Always kept safe and secure
Your teachings and lessons
Will be in our hearts for sure.

Thank you teacher for reaching deep in us
To find all we can be,
Be true we can see it ourselves .
You never gave upon us.
We have a future, because of you .
It is impossible for us to say good bye.
We really miss you teacher .

**Your Students ,**
**Vithusha, Vinujan & Banujan.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி மகேஸ்வரி நவரத்தினம் அவர்களின் ஆக்கங்களில் சில . . .

**சாயி கவசம்**

பர்த்தியில் உதித்த சத்திய சாயி
பாதக் கமலம் பற்றி நின்றோர்க்கு
தொல்லைகள் தீரும் துன்பம் விலகும்
பொல்லா வினையும் சொல்லாதோடும்
மன இருள் அகலும் மாயை விலகும்
பாசம் விலகி பற்றுக்கள் நீங்கும்
சித்தத் தெளிவும் புத்தியும் பெருகும்
கள்ளப் புலன்கள் கட்டுள் அடங்கும்
சத்திய வாழ்வும் தர்ம நெறியும்
சகமதில் உயர்வும் சாந்தியும் கிட்டும்
சாயி சாயி சாயி என்றே
சகலரும் கூடி பஜனைகள் பாடி
தன்னலமற்ற சேவைகள் செய்து
சமநிலை கொண்ட மனமதுமாகி
மூன்றடி வைத்து முன்னே சென்றால்
நூறடி வைத்து எம் முன்னே வருவார்
சுருள் முடிக் கேசம் சோகம் தவிர்க்கும்
சுடரொளி விழிகள் சுகத்தினை நல்கும்
அருள்மொழி வாக்கு அன்பை வளர்க்கும்
அபயஹஸ்தம் அச்சம் தவிர்க்கும்
கரமலர் நீறு கடும் பிணி போக்கும்
கால்வரை அங்கி கருணை காட்டும்

காக்க காக்க எங்களைக் காக்க
போக்க போக்க எம்வினை போக்க
வருக வருக பர்த்தி இறைவா
தருக தருக பாத மலரை
பற்றுக பற்றுக பாதக் கமலம்
சத்திய சாயி சரண் கமலம்
சாயிராம் சாயிராம் சாயிராம் சாயிராம்
சாயிராம் சாயிராம் சாயிராம் சாயிராம்.

## கீர்த்தனை

இராகம்: ஹம்சத்வனி | தாளம்: ஆதி

### பல்லவி

நல்ல வரம் அருள்வாய் ஐயா – பர்த்தி
நாயகனே சத்ய நாரணனே எமக்கு

(நல்லவரம்)

### அனுபல்லவி

வந்தித்து உன்புகழ் வாயாரப் பாடவும்
சிந்தித்து நின்சேவை சிறப்பாகச் செய்யவும்

(நல்லவரம்)

### சரணம்

தித்திக்கும் தெய்வீகப் பாதையைக் காட்டி
தெவிட்டாத ஞானத் தேனையும் புகட்டி
பக்தியோடு உன்பணி செய்ய வைத்து
பற்றிட வேண்டும் உன் பத மலரதனை.

(நல்லவரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீர்த்தனை

இராகம்: ஹிந்தோளம் தாளம்: ஆதி

### பல்லவி

பர்த்திப் புரீஸ்வரன் சத்திய சாயியின்
பத மலர் நினை மனமே – தினமே

(பர்த்திப் புரீஸ்வரன்)

### அனுபல்லவி

அன்பே வடிவான ஆனந்த சாயி
அவனியைக் காக்க வந்த அவதார சாயி

(பர்த்திப் புரீஸ்வரன்)

### சரணம்

வேதநாயகன் விண்ணவர்க்கிறைவன்
ஆழியில் துயில் கொள்ளும் அனந்த சயனன்
அன்னை மரியாளின் அன்புள்ள யேசு
அல்லாவும் புத்தனும் ஐயன் என்றுணர்ந்து.

(பர்த்திப் புரீஸ்வரன்)

# எம்மை ஆட்கொண்டருள்வாய்

இராகம்: ஹம்சத்வனி                                        தாளம்: ஆதி

## எடுப்பு

நாதவடிவான நாயகனே – நல்லை
வேலவனே உமை பாலகனே

(நாதவடிவான)

## தொடுப்பு

சோதனை செய்யாது சுகம் எமக்கீந்திட
கோலமயிலேறி குமரா நீ வரவேண்டும்.

(நாதவடிவான)

## முடிப்பு

நல்லைப் பதியினிலே நாதனே நீயிருக்க
அல்லலுற்று நாம் அலைவது ஏனையா
வல்வினை தீராயோ வடிவேல் அழகனே
வள்ளி தேவயானையுடன் வந்தெமை ஆட்கொள்வாய்.

(நாதவடிவான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவசேனாபதி திருவடி நினை மனமே

இராகம்: சண்முகப்பிரியா　　　　　　　　　　தாளம்: ஆதி

### பல்லவி

செந்தமிழ் குமரன் தேவசேனாபதி
திருவடி நினை மனமே – தினமே

(செந்தமிழ்)

### அனுபல்லவி

அந்தமும் ஆதியும் இல்லா அரன் மகன்
சுந்தர வேலேந்தும் சிவ சுப்பிரமணியன்

(செந்தமிழ்)

### சரணம்

வல்வினை தீர்த்திடும் வள்ளி மணாளன்
புள்ளி மயிலேறும் புருஷோத்தமன் முருகன்
நல்லூர் பதியில் நடமாடிடும் குமரன்
செல்லப்பர் சிவயோகருக்கு அருள்வழி காட்டியவன்

(செந்தமிழ்)

## நிலையான நிம்மதி நீ அளிக்க வேண்டும்

வேலெடுத்து நீ எறிந்து வெற்பை கிழித்தெறிந்து
சூரர் குலம் ஒழித்து தேவர் சிறை மீட்டாய்
வீடிழந்து நாடிழந்து சுற்றம் சுகமிழந்து
ஓடியோடி உணர்விழந்து
வாடியே நிற்கும் உன் இனத்தின்
வாட்டம் நீக்கி வளம் பெருக்கி
வெம்பகையை வேரறுத்து
நிலையான நிம்மதியை நீ அளிக்க வேண்டும்
சிவசண்முகனே சுப்பிரமணியனே

## காத்தருள வந்திடையா

நல்லை நகர் வீற்றிருக்கும் கந்தா
நலம் எமக்கு தந்திடையா நடராசன் மைந்தா

ஆறுபடை வீடு கொண்ட ஆறுமுகா
ஆறுமிடம் தந்திடையா சிவபாலன் மைந்தா

பைந்தமிழின் பாலகனே வேலவா
பரிவுடனே எமைக் காக்க ஓடிவா

அஞ்சேல் என்றுஅபயம் எமக்களிக்கவா
வெஞ்சமரை ஒழிக்க நீயும் ஓடிவா

மஞ்சத்திலே பவனி வரும் வேலவா
மக்கள் மனமுருகி வேண்டுகிறார் ஓடிவா

கருணைக் கடலே கார்த்திகேயனே
காத்தருள வந்திடையா கதிர்வேலவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"


என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைய எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்ந்து வழிகாட்டி எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் **அமரர் திருமதி மகேஸ்வரி நவரத்தினம்** அவர்களின் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறி, துன்ப துயரங்களில் பங்கு கொண்டோருக்கும், உற்றார், உறவினர் நண்பர்களுக்கும் உள்நாடு வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி, இரங்கல் செய்தி வழங்கியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டு வெளியிட்டவர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது குடும்ப விளக்கின் இறுதிச் சடங்கில் பங்கு கொண்ட உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் மற்றும் அன்னார் நோயுற்ற வேளை அவருக்கு வைத்திய உதவி வழங்கி பராமரித்த சென்றல் கொஸ்பிற்றல் வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்களுக்கும், இன்னும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்? அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்."
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின்
சாராம்சமுமாகும்.

- பகவான்
ஸ்ரீ கிருஷ்ணர்

PRINT@ANDRA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org